**OS.No.203/2024, Dated 24.03.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 24th day of March 2025.

**வா.சா.1 - லட்சுமி க/பெ முனுசாமி கவுண்டர் வரவழைக்கப்பட்டு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1ம் பிரதிவாதி எனது சகோதரர் என்றால் சரிதான். ருக்மணி அம்மாள் மற்றும் ராதா எனது சகோதரிகள் ஆவார். 1ம் பிரதிவாதி தான் எனது மற்றும் எனது சகோதரிகளுக்கு சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தார் என்றாலும் தற்போது வரை அவர் தான் செய்கிறார் என்றால் இல்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அவர்களுடைய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. அவர்கள் பணமாக அவர்களுடைய பாகத்திற்கு தொகை வாங்கி கொண்டார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. தாவா சொத்துகளை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துகளின் மதிப்பு அதிகமானதால் 1ம் பிரதிவாதியிடம் பணம் பறிக்கும் நோக்கில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. ஏற்கனவே, 1ம் பிரதிவாதியிடம் நான் தொகை வாங்கிக்கொண்டு அவரை ஏமாற்றும் நோக்குடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.